# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 139/2019

## Deposition of Witness for : PW 1

**Name** : திருமதி. ரேகா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-09-2023.**
**(Accused present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது சித்தேரி ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இறந்து போன சேகர் என் கணவர். 17.11.2017ந் தேதி அன்று மாலை 7 மணிக்கு என் கணவருக்கும், எதிரிக்கும் வரப்பு தகராறு ஏற்பட்டு சண்டை போட்டுக் கொண்டார்கள். எதிரி வரப்பை வெட்டிக் கொண்டு இருந்தார். அதற்கு என் கணவர் பொதுவான வரப்பை எதற்கு வெட்டுகிறாய் என்று கேட்டார். அதற்கு எதிரி அப்படி தான் வெட்டுவேன் தேவிடியா பையா என்று கூறினார். இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. கழனியும் வீடும் ஒரே இடத்தில் உள்ளது. 20 நிமிடம் கழித்து எதிரி அவரது மனைவியை அழைத்துக்கொண்டு கையில் கொம்புடன் எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது நானும் என் கணவரும் வீட்டில் இருந்தோம். உயிரோடு இருந்தால் தானே சண்டை போடுவாய் என்று கூறி என் கணவரின் முன் மண்டை மற்றும் பின் மண்டையில் அடித்தார். அந்த ரத்தக் காயத்தால் என் கணவர் மயங்கி விழுந்து விட்டார். நான் ஊரில் சென்று மஞ்சுளா, வெங்கடேசன், ராஜசேகர், முருகன், சிவக்குமார் ஆகியோரை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன். எதிரி சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டார். அதன் பிறகு சிவக்குமார் ஆம்புலன்சிற்கு போன் செய்து வேலூர் அரசு மருத்துவமனையில் என் கணவரை அனுமதித்தோம். அங்கு என் கணவர் சிகிச்சை எடுத்துக் கொண்டார். மறுநாள் காலை முருகன் துணை கொண்டு நான் சொல்ல சொல்ல முருகன் புகாரை எழுதினார். பிறகு நான் சந்தவாசல் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. அதன் பிறகு நான் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். 18.11.2017ந் தேதி என் கணவர் மாலை 4 மணிக்கு இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் தடியை கொண்டு தான் எதிரி என்

கணவரை அடித்தார். அது சா.பொ.1. என் கணவர் இறந்த பிறகு பிரேத பரிசோதனைக்கு பிறகு வீட்டிற்கு எடுத்து வந்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஆத்துவாம்பாடி சித்தேரி கிராமத்தில் நிலத்தில் தனியாக வீடு கட்டி என் கணவருடன் வசித்து வந்தேன் என்றால் சரிதான். கொல்லை கொட்டாய்க்கும், ஆத்துவாம்பாடி கிராமத்திற்கும் இடையே 2 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். என்னுடைய வீடு ஷீட் போட்ட வீடு ஆகும். மண் வாசல். எதிரியின் வீடு சுமார் 600 அடி தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. கூப்பிட்டால் பேசுகின்ற அளவிற்கு அவரது வீடு அமைந்துள்ளது. எங்களுடைய நிலத்தை விட எதிரியின் நிலம் மேடாக அமைந்துள்ளது. அதில் பொதுவான வரப்பு உள்ளது.

வரப்பு சம்மந்தமாக கடந்த 3 ஆண்டுகாலமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் கடந்த 3 மாதமாகத்தான் பிரச்சனை இருந்து வந்தது. 17.11.2017ந் தேதி பிரதிவாதி வரப்பை வெட்டிக்கொண்டு இருக்கும் போது என் கணவர் அங்கு சென்று கேட்டு இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சென்று சண்டை வேண்டாம் என்று அழைத்து வந்து விட்டேன். பிறகு என் கணவர் வீட்டிற்கு வந்து படுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நானும் என் கணவரும் எங்கள் வீட்டு வாசற்படியில் நின்று கொண்டு இருந்தோம். எதிரி கொம்புடன் அவரது மனைவியை அழைத்துக் கொண்டு எங்கள் அருகில் வந்து விட்டார். என் கணவரை அடித்தபோது நான் தடுத்தேன். என்னை பிடித்து தள்ளிவிட்டார்கள். என் கணவரை யாரும் அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என் கணவரை அடிக்கும் போது நான் தடுத்தேன் என்றும், என்னை தள்ளிவிட்டார்கள் என்ற விவரத்தை என் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை. சம்பவம் நடந்த எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸ் வந்தது என்றால் நான் அழுது கொண்டு இருந்ததால் எத்தனை மணிக்கு வந்தது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. சுமார் 9 மணிக்கு மேல் இருக்குமா என்றால், இருக்கலாம். சம்பவம் தினத்தன்று என் கணவர் குடித்திருந்தார் என்றால் சரியல்ல. ஆம்புலன்சில் நான் உடன் சென்றேன். என்னுடைய கிராமத்திற்கும், அடுக்கம்பாறை மருத்துவமனைக்கும் சுமார் 60 கி.மீட்டர் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் என் கணவர் தனக்கு என்ன நடந்தது என்று சொல்லியிருப்பாரா என்றால் சொல்லக்கூடிய நிலையில் இல்லை.

என் மருத்துவமனையில் டாக்டர் விசாரித்தார். நான் சண்டையால் ஏற்பட்டது என்று குறிப்பிட்டேன். மருத்துவமனையில் சேர்க்கும் போது இரவு 12 இருக்குமா என்றால் இருக்கலாம். நான் இரவு முழுவதும், மறுநாளும் என் கணவருடன் ஐ.சி.யு வார்டில் இருந்தேன். மறுநாள் காலை 12 மணிக்கு புகார் கொடுத்தேனா என்றால் காலை 9 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என் கணவர் அளவுக்கு அதிகமாக குடித்திருந்ததால் மருத்துவர்கள் இரவு முழுவதும் வைத்தியம் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு தெற்கால் 3 -4 அடி ஆழம் கொண்ட வாய்கால் செல்கிறது என்றால் சரிதான்.

ஓடையில் கற்கள் உள்ளன என்று சொன்னால் எங்கள் பகுதி நன்றாக உள்ளது. கொம்பு வேறு தடி வேறு, என் கணவரை அடித்தது கொம்பு தான். சா.பொ.1ஐ இரவு நேரம் என்பதால் நான் பார்க்கவில்லை என்றல் சரியல்ல.இரவு லைட் எரிந்து கொண்டு இருந்தது. எங்கள் வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை என்று சொன்னால் நாங்கள் மோட்டார் பம்பு செட்டில் இருந்து லைட் கனெக்ஷன் கொடுத்து இருந்தோம். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை

என் கணவரின் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் அளவுக்கு அதிகமாக குடித்து விட்டு கீழே விழுந்ததினால் நான் அவருக்கு தலையில் பலத்த அடிப்பட்டது என்றும், அதனால் இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு போலியான ஒரு புகாரின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- ரேகா

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 139/2019**

**Deposition of Witness for : PW 2**

**Name** : திரு. வெங்கடேசன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-09-2023.**

**(Accused present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2017ம் வருடம் அ.சா.1 ரேகா எதிரிக்கும் அவரது கணவருக்கும் சண்டை நடப்பதாக அழுதுகொண்டே ஊருக்கும் ஓடிவந்தார். நான், மஞ்சளா, ராஜசேகர், முருகன், சிவக்குமார் ஆகியோர் சேகர் நிலத்திற்கு ஓடினோம். நாங்கள் சென்ற போது சேகர் அடிப்பட்டு மயக்கம் போட்டு கிழே விழுந்து கிடந்தார். பிறகு சிவக்குமார் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து சேகரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விசாரித்ததில் எதிரிக்கும், சேகருக்கும் வரப்பு தகராறு ஏற்பட்டு எதிரி கொம்பால் சேகரை அடித்ததாக கேள்வி பட்டேன். அதன் பிறகு அ.சா.1 சொல்லி சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 7.30 மணி இருக்கும். சேகர் இருக்கின்ற வீட்டிற்கும், ஊருக்கும் சமார் 1 1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும். வரப்பு தகராறு மற்றும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் ஆம்புலன்சில் சேகரை ஏற்றி அனுப்பவில்லை. சேகர் வீட்டிற்கு தெற்கு பக்கம் 4 - 5 அடி ஆழம் உள்ள

ஒரு ஓடை செல்கிறது. ஓடையில் கற்கள் உள்ளன. சேகருக்கு குடிபழக்கம் உண்டு. சம்பவம் நடக்கும் நாளில் சேகர் குடித்து இருந்தாரா என்றால் அதனை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை ஊரில் வைத்து விசாரணை செய்தார்கள்.

ஒம்/- வெங்கடேசன்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.